[*2023 மார்ச் 27*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள் சுட்டிக்காட்டிய இடம் குறித்த விவரங்களை துறைக்கு அனுப்பி, துறையினுடைய அதிகாரிகள் மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களைச் சந்தித்து, அதற்கான வழிமுறைகளை உருவாக்குவதற்கு அறிவுறுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முருகேசன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

46—

ஆரம்ப சுகாதார நிலையம்

***50875—திரு. செ. முருகேசன்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, பரமக்குடி ஒன்றியம், தெளிச்சாத்தநல்லூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஒன்றிய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. தெளிச்சாத்தநல்லூர் கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் பரமக்குடி அரசு மருத்துவமனை செயல்பட்டு வருவதால்,

2023 மார்ச் 27]

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி சுகாதார மாவட்டம், பரமக்குடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள தெளிச்சாத்தநல்லூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முருகேசன் அவர்கள்.*

திரு. செ. முருகேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். எனது பரமக்குடி தொகுதி, பரமக்குடி ஒன்றியம், தெளிச்சாத்தநல்லூர் கிராமத்தில், சுற்று வட்டார கிராம பொதுமக்களின் நலன்கருதி, ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, ஆரம்ப சுகாதார நிலையங்கள், கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் என மொத்தம் 2,286 இருக்கின்றன.*

7, 8 ஆண்டுகளுக்குப் பிறகு, கடந்த ஆண்டுதான் வணக்கத்திற்குரிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலை ஏற்று, ஒன்றிய அரசு, 25 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 25 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் என முதன்முறையாக 50 சுகாதார நிலையங்களை ஒரே ஆண்டில் தந்திருக்கிறது. அவற்றையெல்லாம் தற்போது எங்கெங்கே அமைப்பது என்று அரசாணைகள் வெளியிடப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஏற்கெனவே நான் சொன்ன விதிமுறைகளின்படி, ஒரு மருத்துவமனைக்கும் மற்றொரு மருத்துவமனைக்குமிடையே குறைந்தபட்சம் 8 கி.மீ. இடைவெளி இருக்க வேண்டும் என்ற வகையிலும், 30,000-க்கும் மேற்பட்ட மக்கள்தொகை இருக்க வேண்டும் என்ற வகையிலுமான அந்த நியதிகளின்படி, தமிழ்நாட்டிலிருக்கின்ற கிராமப்புறங்களில் போதுமான அளவில் மருத்துவமனைகள் அமைந்திருப்பதாக ஒன்றிய அரசு

சொல்லிக்கொண்டிருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மிகச் சிறந்த வகையில் மருத்துவக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு இட்டிருக்கிற கட்டளையின் காரணமாக, பரமக்குடி சட்டமன்றத் தொகுதியில் மட்டும், 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பார்த்திபனூர் பல்நோக்கு சுகாதார செவிலியர் மையம் கட்டி முடிக்கப்பட்டு, சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது; எடையாத்தூரில் 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையம், தடுத்தாலங்கோட்டை பகுதியில் 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையம், மேலபெருங்கரையில் 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு துணை சுகாதார நிலையம், எம். நெடுங்குளம் பகுதியில் 20 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு துணை சுகாதார நிலையம், பாம்பூர் அரசு சுகாதார நிலையம் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டிலும், இலட்சுமிபுரத்தில் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு சுகாதார நிலையம் என்று கடந்த ஓராண்டில் மட்டும் வணக்கத்திற்குரிய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 10–35

அதோடுமட்டுமல்லாது, இப்போதும்கூட, Bharathiyar Park பகுதியில் ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டிலும், பார்த்திபனூர் பகுதியில் வட்டாரப் பொது சுகாதார நிலையம் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும், நயினார்கோவில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் புறநோயாளிகள் பிரிவு ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டிலும், போகலூர் ஆரம்ப சுகாதார நிலையம் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டிலும், அதேபோல், நென்மேனி பகுதியில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆக மொத்தம், 2 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 5 புதிய கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றையும் தாண்டி, நகர்ப்புற நல வாழ்வு மையங்கள் என்று இரண்டு இடங்களில், சந்தைக்கடையில் ஒன்றும், தர்மராஜபுரத்தில் ஒன்றும் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒரு சட்டமன்றத் தொகுதியில் மட்டும் இவ்வளவு பணிகள் நிறைவுபெற்று, கட்டடங்கள் திறந்து வைக்கப்படவிருக்கின்றன. இவ்வளவு பணிகள் நடைபெற்றும் கொண்டிருக்கின்றன. எனவே, தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இந்தக் காலக்கட்டம் என்பது, மருத்துவத் துறைக்கு, குறிப்பாக,

2023 மார்ச் 27]

பரமக்குடிக்கு ஒரு பொற்காலம் என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மனதில் இருத்திடல் வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முருகேசன் அவர்கள்.*

திரு. செ. முருகேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதிக்கு பல்வேறு திட்டங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதேபோல, பரமக்குடி மருத்துவமனையை தலைமை மருத்துவமனையாக அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் பரமக்குடி தொகுதி மக்களின் சார்பில் நன்றிசொல்லி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட தணிகைப்போளூர் ஊராட்சி, மிகப் பெரிய ஊராட்சி. ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு அரசு கேட்கக்கூடிய அத்தனை நிபந்தனைகளையும் தணிகைப்போளூர் ஊராட்சி பூர்த்தி செய்துள்ளது. ஆகவே, தணிகைப்போளூரிலே ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு சுகாதாரத் துறையும் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே தணிகைப்போளூரிலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, கிராமப்புறங்களில் மக்கள் தொகைக்கேற்ப, மருத்துவக் கட்டமைப்புகள் அமைந்திருக்கின்றன என்ற வகையில் புள்ளிவிவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன என்றாலும்கூட, நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள்*

2 மாதங்களுக்கு முன்னர், ஒன்றிய அமைச்சரைச் சந்தித்து இன்னும் 25 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அனுமதி கோருங்கள் என்று எங்களைக் கேட்கச் சொன்னார்கள், கேட்டிருக்கிறோம்; விதிமுறைகளின்படி இருந்தால், நிச்சயம் அதை அங்கே அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதில் ராதாபுரமும் ஒன்றாக இருக்குமென்று நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வணக்கம். திருவள்ளூர் தொகுதி வளர்ந்து வரக்கூடிய தொகுதி. அங்கு 500 படுக்கை வசதி கொண்ட புதிய மருத்துவமனைக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டிருக்கிறது. அந்த மருத்துவமனைக்குப் புறநோயாளிகள் கிட்டத்தட்ட 2,500 பேர் வந்து கொண்டிருக்கிறார்கள். அதிலும், குறிப்பாக, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: Heart attack வந்தால், இருதய நோய் சிகிச்சைக்கு அங்கே வசதிகள் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதற்கு அந்த மருத்துவமனையிலேயே ஒரு Cath Lab அமைத்துத் தர வேண்டும். ஏனென்றால், GH-க்கு refer செய்யப்பட்டு சென்னைக்கு வந்தார்களென்றால், heart attack ஏற்பட்டு, கொஞ்சம் emergency situation வருகிறது. அதனால், அந்தப் பகுதியிலேயே ஒரு Cath Lab அமைத்து அதே மருத்துவமனையிலே இருதய நோய் சிகிச்சைப் பிரிவைத் தனியாகத் திறந்திட வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் 500 படுக்கை வசதியுடன்கூடிய மருத்துவமனை

2023 மார்ச் 27]

தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி அண்மையில் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. 26 சிறப்புப் பிரிவுகளுடன்கூடிய மருத்துவச் சேவைகள் அங்கே வழங்கப்பட்டு வருகின்றன. மாண்பிற்கினிய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருப்பதைப்போல, இருதய நோய் சிகிச்சைக்கான ஒரு சிறப்புப் பிரிவை வரும் நிதியாண்டில் அங்கே அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.*

திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆலங்குளம் தொகுதியிலுள்ள கடையம் ஒன்றியத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைந்திருக்கின்றது. கிட்டத்தட்ட 50 கிராமங்களிலிருந்து நோயாளிகள் அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வந்து செல்கின்றனர். ஆனால், போதிய மருத்துவ வசதிகள் அங்கே இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய 'தொகுதிக்கு 10 கோரிக்கை' என்ற திட்டத்தின் அடிப்படையில், அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதி கொண்ட அரசு மருத்துவமனையாகத் தரமுயர்த்த வேண்டுமென்ற என்னுடைய தலையாய கோரிக்கையை வைத்திருக்கின்றேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடையம் ஒன்றியத்தில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதி கொண்ட அரசு மருத்துவமனையாகத் தரமுயர்த்துவதற்கு இந்த ஆண்டு நடவடிக்கை எடுப்பார்களா, அதைப் பரிசீலிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாகத் தரமுயர்த்தும்போது, 30 படுக்கை வசதி கொண்டதாகத் தரமுயர்த்தப்படும். ஆனாலும், அதற்கான நிதியாதாரத்தைப்*

பொறுத்தவரை, ஒன்றிய அரசின் வழிகாட்டுதலும், அங்கிருந்து ஒரு பங்களிப்பும் வர வேண்டுமென்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டிலிருக்கிற சுமார் 100-க்கும் மேற்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துவதற்கான வாய்ப்பை அளிக்க வேண்டுமென்று ஏற்கெனவே கோரிக்கை வைத்திருக்கிறோம். அந்தக் கோரிக்கை நிறைவேறும்பட்சத்தில், நிச்சயம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையையும் பரிசீலிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. வெங்கடேசன் அவர்கள்.

திரு. ஆ. வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சோழவந்தான் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாடிப்பட்டி தாலுகா, கச்சைக்கட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதனருகே இருக்கக்கூடிய பூச்சம்பட்டி மற்றும் செம்மினிபட்டி கிராம மக்கள் அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் செல்ல முடியாத நிலை இருக்கிறது. அதனால், அவர்கள் அங்கிருந்து வெகுதூரமுள்ள சித்தாலங்குடி மருத்துவமனைக்குத்தான் சென்று வர வேண்டிய நிலை இருக்கிறது. இதுகுறித்து, அந்தக் கிராம மக்கள் மூலமாகவும், எங்கள் மாவட்ட அமைச்சர் அவர்கள் மூலமாகவும் மாவட்ட அதிகாரி வரை தெரியப்படுத்தியிருக்கிறோம். இன்றுவரை அதற்கான நடவடிக்கையை Deputy Director of Health Services. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், என்ன வேண்டுமென்று கேளுங்கள்.

திரு. ஆ. வெங்கடேசன்: அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் பக்கத்தில் இருக்கிற கிராம மக்கள், வேறொரு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சென்றால், உங்களுக்கு சித்தாலங்குடி கிராமத்தில் இருக்கின்ற Primary Health Centre தான் applicable என்று சொல்கின்றனர். அங்கே செல்வதற்கு போக்குவரத்து வசதியும் கிடையாது. எனவே, பக்கத்தில் இருக்கிற. . .

2023 மார்ச் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பக்கத்தில் இருக்கிற மருத்துவமனைக்கு அந்த மக்கள் செல்வதற்கு அனுமதியளிக்க வேண்டும் என்று கேட்கிறீர்கள்.

திரு. ஆ. வெங்கடேசன்: பக்கத்திலே இருக்கிற மருத்துவமனைக்கு அந்தக் கிராம மக்கள் செல்வதற்கு அனுமதி வழங்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்பிற்கினிய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருப்பதைப்போல, தற்போது வேறொரு ஆரம்ப சுகாதார நிலையத்தோடு இணைக்கப்பட்டிருக்கிற இரு கிராமங்கள்—நாளை காலை அவர் இங்கே வருகிறபோது—அவர் குறிப்பிட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தோடு இணைக்கப்பட்டுவிட்டது என்கின்ற ஆணையை (மேசையைத் தட்டும் ஒலி) அவரிடத்திலே நேரடியாகத் தருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்பியூரைத் தலைமையிடமாகக் கொண்டு வட்டாட்சியர் அலுவலகம் அங்கே அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் பல ஆண்டுகளாக இயங்கிக் கொண்டிருக்கிறது. ஜனத்தொகைக்கேற்ப அதை அரசு மருத்துவமனையாகத் தரமுயர்த்த வேண்டுமென்ற வேண்டுகோள் அந்தப் பகுதி மக்களால் வைக்கப்பட்டிருக்கிறது. அதுகுறித்து அரசிற்கும் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு நம்பியூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை, அரசு மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தொடக்கத்திலே சொன்னதைப்போல, ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்துவதில் நிதியாதாரம் மற்றும் பணியிடங்களைக் கூடுதலாக்குவது ஆகிய இரு விஷயங்கள் இருக்கின்றன. அதைக் கருத்தில்கொண்டுதான், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுமார் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துவதற்கு ஏற்கெனவே ஒன்றிய அரசிடம் அனுமதி கேட்டிருக்கிறார்கள். அந்த அனுமதி வருகிறபோது, மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

47—

பேருந்து வசதி

***15397—திரு. வே. சம்பத்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோட்டப்பட்டியிலிருந்து தீர்த்தமலை வழியாக பெங்களூரு வரை பேருந்து இயக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற கோட்டப்பட்டி முதல் தீர்த்தமலை வழியாக பெங்களூரு செல்வதற்கான வழித்தட பேருந்து இயக்கப்பட வேண்டுமென்றால், 237 கிலோ மீட்டர் வரை இயக்கப்பட வேண்டும். ஏற்கெனவே கோட்டப்பட்டியிலிருந்து அரூருக்கு 11 அரசு பேருந்துகளும், 11 தனியார் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. அரூரிலிருந்து தருமபுரிக்கு 15 அரசு பேருந்துகளும், 6 தனியார் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. தருமபுரியிலிருந்து பெங்களூருக்கு